PONNAMBALAM PICTURES
present
EKNATH
DIRECTED BY
METHA
PICTORISED BY
PATEL

நடிகர்கள்.

N. கிருஷ்ணமூர்த்தி	...	...	கிருஷ்ணன்
P. ராமஸ்வாமி	...	...	தத்தாத்ரேயர்.
N. ஸ்ரீனிவாசன்	...	...	ஜனார்த்தனர்.
P. S. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார்	...	...	ஏகநாதர்.
S. குப்புசாமி	...	...	ஜகந்நாதன்.
ராமசாஸ்திரி	...	...	ராமசாஸ்திரி
P. B. ஸ்ரீனிவாசன்	...	...	சுப்பாசாஸ்திரி.
N. ராமமூர்த்தி	...	...	ஸோமேசன்
K. S. அனந்தன்	...	...	வாமன சர்மா.
S. வாசுதேவன்	...	...	நீலகண்டன்.
Master கோபாலன்	...	...	மாதவன்.
Master சக்கரவர்த்தி	...	...	கோபாலன்.
Baby துரை	...	...	ஹரி.
Master B. ஸ்ரீதரன்	...	...	கோவிந்தன்.
C. பத்மாவதிபாய்	..	...	கிரிஜா.
சீதா லக்ஷ்மி	...	...	சீதா.
லக்ஷ்மி	...	...	சாரதா.
இந்திராணி	...	...	கமலா.
சரோஜா	...	...	சரஸ்வதி.
ராஜலக்ஷ்மி	...	...	லக்ஷ்மி.
N. நீலா	...	...	தாயி.
N. சுலோசனை	...	...	ருக்மணி.

மகாத்மா

ஏகநாதர்

தயாரித்தவர்கள்,

பொன்னம்பலம் பிச்சர்ஸ்,

கோயமுத்தூர்.

Distributors:—

RATNA & Co.,

COIMBATORE.

ஜனர்த்தனர் வீட்டில் ஏகநாதர் கணக்குகளைப் பார்த்துக் கொண்டிருந்த போது ஒரு ஸர்ப்பம் வந்து அவர் கழுத்தில் சுற்றிக்கொள்ள, அதையும் கவனியாமல் கணக்குப் பார்த்துக் கொண்டிருந்தார். தற்செயலாய் ஜனர்த்தனர் வந்து அந்தப் பாம்பைப் பார்த்து தன் சக்தியால் அதை ஒரு புஷ்ப மாலையாக மாற்றி, ஏகநாதருக்கு உபதேசம் செய்கிறார்.

பைடனீ புரத்தில் ஏகநாதர் வீட்டுக்கு எதிர்வீட்டு ஜகந்நாதன் தன் சிஷ்ய கோஷ்டியில் ஒருவரான சுப்பா சாஸ்திரியின் சம்சாரம் கமலா தன் வீட்டிற்கு ஏதோ வேலையாய் வந்த சமயம் அவளை தன் வசமாக்கிக் கொண்டு அவளுடன் தனியே இருக்கும் போது அவனது ஊமைப் பிள்ளை கோவிந்தன் இதை கவனித்து, வெளியே போயிருந்து திரும்பி வந்த தன் தாய் சாரதாவிடம், தன் தகப்பன் செய்தவைகளை ஊமை ஜாடையாய் சொல்ல, அதை அவள் தெரிந்துகொள்ளாமல்போக ஜகந்நாதன் கமலாவை ஆண் வேஷத்துடன் வெளியே அனுப்பிவிடுகிறான்.

ஏகநாதர் பக்தி அதிகரித்து வருவதைக் கண்டு ஜனர்த்தனர் அவருக்கு தன் குரு தத்தாத்ரேயரை தரிசனம் செய்து வைக்க நினைத்து அழைத்துப் போகிறார் அங்கு தத்தாத்ரேயர் ஓர் இடையன் ரூபத்தில் வரக்கண்டு சந்தேஹித்து ஏகநாதர் ஜனர்த்தரால் கூப்பிடப்பட்டும், ஒளிந்து கொள்ள தத்தாத்ரேயர் மறைந்துவிடுகிறார் ஜனர்த்தனர் இன்னும் ஏகநாதருக்குப் பிராப்தகாலம் வரவில்லையென்று அழைத்து வந்துவிடுகிறார்.

ஜகந்நாதன் தன்னிடம் கௌரவம் வைத்திருக்கும் அவ்வூர் வைதீகர்களிடம் ஏகநாதன் மனைவி கிரிஜாவுக்கு திடீரென ஐசுவரியம் வந்ததால் அவள் நடவடிக்கைகளைப்பற்றி பல விதமாய் தூஷித்து வருகிறார்.

ஜனர்த்தனர் இரண்டாந்தரம் ஏகநாதரை அழைத்துக்கொண்டு போய் காட்டில் தத்தாத்ரேயர் தரிசனம் செய்து வைத்து ஞானோபதேசம் செய்து ஏகநாதரை பைடனீபுரம் அனுப்புகிறார். ஏகநாதர் வீடுசேர்ந்து பஜனை செய்து கொண்டுவருகிறார். ஜகந்நாதர் எப்பொழுதும் ஏகநாதரை தூஷித்துக்கொண்டும், அவரை பலவிதத்தில் தொந்திரவு செய்து கொண்டும் வருகிறார் ராமச்சந்திரன் அனுக்ரகத்தால் ஏகநாதர்மஹாராஷ்டிர பாஷையில் ராமாயணம் எழுதுகிறார். துவாரகாநாதனான கிருஷ்ண பரமாத்மா ஏகநாதரின் பக்தி விசேஷத்தை உலகோருக்கு எடுத்துக் காட்ட நினைத்து ஒரு பரிசாரகன் போல் ரூபந்தரித்து ஏகநாதரிடம் வேலைக்கு அமருகிறான்,

ஒருநாளிரவு கிருஷ்ணன் ஏகநாதர் குழந்தைகளுடன் பஜனைசெய்து கொண்டிருக்கும்போது அந்த கானத்தை கேட்டு ஊரார் முழுதும் பஜனைக்கு வந்து கூடுகிறார்கள். ஏகநாதர்மேல் விரோதமும் பொறாமையும் கொண்ட ஜகந்நாதனும் பஜனைக்கு வருகிறான். விடியும்வரை பஜனை நடக்கிறது.

விடிந்ததும் ஏகநாதரின் பிதுரு சிராத்தமாகையால் சிராத்த சமையல் தயாராகும் வாஸனையைக்கண்டு, கொல்லைப்புறம் தோட்டவேலை செய்துகொண்டிருந்த முனியனும், அவன் தங்கை தாயும், ஆசைப்பட இதைக்கேட்டிருந்த ஏகநாதர் சிராத்தத்திற்கான சமையலை பறையர்களுக்குபோட்டுவிட்டு சிராத்தத்திற்கு வேறு சமையல் தயாரிக்க, இதுகளை கவனித்துக்கொண்டிருந்த சாஸ்திரிகள் ஜகந்நாதர் தூண்டுதலால், ஏகநாதரை ஜாதிப்ரஷ்டம் செய்துவிடுகிறார்கள்.

ஏகநாதர் சிராத்தம் வீணாகிறதே என்று வருந்த கிருஷ்ணபரமாத்மா அனுகிரகத்தால் பிதுருக்களே நேரில் வந்து ஏகநாதரை ஆசீர்வதித்து போகிறார்கள்.

இதைப் பார்த்திருந்த சாஸ்திரிகள் ஜகந்நாதருடன் கலந்து யோசித்து ஏகநாதருக்குப் பிராயச்சித்தம் செய்துவைத்த பிறகு சேர்த்துகொள்வதென்று தீர்மானித்து, ஏகநாதரிடம் வந்து அவரை நதிக்கு அழைத்துப் போகிறார்கள்.

நதிக்கரையில் பிராயசித்தம் நடக்கும்போது ஒரு நீலகண்டன் என்ற குஷ்டரோகி வந்து ஏகநாதர் யாரென்று கேட்க சாஸ்திரிகள் அவனைக்கண்டு வெறுத்துத் துரத்த இதை கவனித்திருந்த ஏகநாதர் அக் குஷ்டரோகப் பிராம்மணனை அணுகி அன்புடன் விசாரிக்க அவன் பரமசிவனை உபாஸித்து வருவதாயும், சொப்பனத்தில் பரமசிவன் வந்து அன்று ஏகநாதரிடம் வந்து அவர் பறையர்களுக்கு அன்னமளித்ததில் ஒரு சிறு குழந்தை உண்ட பலனை தனக்கு தத்தம் செய்தால் குஷ்டம் நிவர்த்தியாகுமென்று சொன்னதாயும் சொல்ல, அப்படியே தத்தம் செய்ய அவன் குஷ்டம் நிவர்த்தியாகி அக்கர்மம் அப்பிராமணனை வெறுத்த சாஸ்திரிகளைப்பற்ற அவர்களுக்கு அதே விநாடியில் குஷ்டம் உண்டாகிறது! இதே சமயம் ஏகநாதரை தொந்திரவு செய்து வந்த ஜகந்நாதனுக்கும் அவன் வீட்டில் குஷ்டம் உண்டாகிறது. ஏகநாதர் அனுக்ரகத்தால் நதிக்கரையில் சாஸ்திரிகள் குஷ்டம் நிவர்த்தியாகி வீடு திரும்ப ஜகந்நாதன் வந்து ஏகநாதர் காலில் விழ அவன் குஷ்டம் நிவர்த்தியாகியது. அதே சமயம் அடுத்த வீட்டு சீதாவுக்குக் கண் தெரியாமல்போய் அவளும் ஏகநாதர் காலில் விழ அவள் கண் தெரிந்தது.

ருக்மணி தன் நாதன் கிருஷ்ண பகவான் ஏகநாதருக்குப்பரிசாரகம் செய்து வருவதால் அவர் வருகையை உத்தேசித்து துளஸிபூஜை செய்யும் சமயம் கிருஷ்ணனை உபாசித்து வரும்வாமனன் என்னும் ஒரு பிராமணன் வந்து கிருஷ்ணனைப்பற்றி விசாரிக்க, ருக்மணியால் கிருஷ்ணனிருக்கு மிடமறிந்து விட்டதாய் சொப்பனம் கண்டு பைடனீபுரம் வந்து ஏகநாதர் வீடு சேர்ந்து கிருஷ்ணன் என்று பரிசாரகம் செய்துக்கொண்டிருப்பவன் எங்கே என்றுகேட்க ஏகநாதர் அவன் நதிக்கு ஜலம் கொண்டுவரப்போயிருப் பதாய்ச்சொல்லி அவரை உட்காரவைத்து உள்ளே போகிறார்.

கிருஷ்ணன் காவடியில் ஜலம் எடுத்துக் கொண்டுவர வாமனன் பார்த்து அவரை ஸ்தோத்தரிக்க, இதை கேட்டுக்கொண்டிருந்த ஏகநாதர் தன்னிடம் பரிசாரகம் செய்து வந்தவன் கிருஷணபரமாத்மாவென்று தெரிந்து மூச்சையாகிறார். கிருஷ்ணன் மறைகிறான்.

பிறகுநடக்கும் சம்பவங்களை திரையில் பார்த்து அனுபவியுங்கள்.

சுபம்! சுபம் !! சுபம் !!!

ஏ க நா த ர் .

பாட்டுகள்

1. பிச்சைக்காரர் பாட்டு

நெறிதவறிடா மேலார்போல் திவாகரன் பாருதித்தான்
மாசிலா தார் அத்தனுரையே போற்றிடும்நாளே தந்தானதே
லோபிகள் வீணே கருமம்போக்கா நாளேதானந்தோ (தி)

பார் மேலாதியை நாடிடுமேலார்
ஆத்மதாஹிகள் ஆகும்மேலார்
தர்மமே செய்ய விடிந்ததேபார்
காரகன்றே போய் (தி)

2, ஜனார்த்தனர்

மூலமதுமீதேறி மூளைத்ததீபம்
மூச்சுடருமொன்ருக விளங்கும்தீபம்
கால்சேர்ந்து சுழிமுனையாய்த் துலங்கும் தீபம்
கர்ப்பூர தீபமதை குருநாதா கையில் வாங்கே

3. ஏகநாதர்

(பிலஹரி)

ஸ்ரீஹரி மாதவனே கல்யாணகுண (ஸ்ரீ)
நாடியே நானும் நாதனை அடைந்தேனே
தேட்டிட உனதரும் தாளினைப் பணிந்திட (ஸ்ரீ)
ஸனகஸனந்தியர் போற்றிடும் புண்யனே
மனமார உந்தனை மனதினில் நினைத்துமே
கதிபெற உனையே நான் கணமெனும் மறவாமல்
துதிபுரிந்தேவா துணை குருநாதனே (ஸ்ரீ)

4. கிரிஜா

பரமாதுயரே படுநாள் உனையே
மறவா வரமே அருளாய் நீயே

5. கிரிஜா

எவருட சதி இதுவோ—எமதுட
பவவினைப் பயனிது தானே அறிந்திலனே நான் (எ)
யாதென அறியா பேதையைப் பரனே
சோதனைபலவும் நாளினி பொறுத்திடவே
மனவலு அருளிட உனதிருபதமலர் மணிக்தேன் (எவ)

6. ஏகநாதர் குழந்தைகள்—பஜனை

கல்யாண குண ஸ்ரீ ஹரே கல்யாண முராரே
நின்பதமே பணிந்தோர்களின் ஸஹாயா முராரே
நின்நாமமே கழரும் வானோரின்நேயா முராரே
நின்பொன் மார்பிலே வாழ்ந்திடும் ஸ்ரீநாதா முராரே
நின் ஆப்தரெமைக்கார் ஹரே கல்யாண முராரே

7. கிரிஜா

இனிபரமன் அருளாலே
ஊழிவினை ஓடிடுமே தாவி தாவி
கமலவதன கண்ணபிரான்
பாதமதே உலகுமீதே
செய்தவினை பலதானே
பதறி ஓட பசு மூலி

8. ஏகநாதர்

மெய்யெல்லாம் சோரவிட்டு கலியுட வாதைப்பட்டு
பொய்யெல்லாம் பொதிந்து கொண்ட பித்தன் நான் வந்த
[டைந்தேன்
துய்யனே என்னையனே அன்புடன் ஆசிதந்தே
மெய்த்தவம் இன்னதென்றே உய்வகை ஈந்ததேவே

9. ஜனாத்தனர்

(காகரப்ரியா)

மாயோகதான வரனே தீன தயாபரனே
க்ருபாநிதி அடியேனுட மனோபீஷ்டமே முடித்தருள் (மா)
லோகாதீதனே எந்தன் நலங்கருதும்
ஞானதேவா கணம் உனைபாரில் நானே குருநாதாஸே
[விக்க (மா)

ஸதா நின் கருணை ப்ரஸாதம் பருகவே அடியேனெனை
எதார்த்தமனதொ ஸதாத் துதியுடன் பணியும்
சீடனுட மனங்களிந்திட நின்னருள் பெற
நின் தரிசனப் தந்துமேயருள் (மா)

10. ஜனார்த்தனர்

(அசாவேரி)

குருநாதனே மாயோகி தயவாயிவ்வேளை நீ
ஸேவை தாராயே தேவா
ஏகனை ஆசி செய்வாயே (குரு)
பணிந்தேனே நான் புவனாதிபாலா
பாவன பாதா (குரு)

11. ஏகநாதா

(தோடி)

கண்டே இன்றென் கலியும் தீர்ந்ததே
காலனின் காலனும் மாலயன் சேர்ந்துமே (கண்)
என் குருநாதரின் இன்னருளாலின்று
முன்னவர் மூவரே தானெனமாரி
அன்பாயெனக்கொரு கண்ணிமைப் போதிலே
கன்மமே போக்கிய சின்மயரூபனே

12. கிரிஜாவும் குழந்தைகளும்—பஜனை

நந்தகுமாரா கிருஷ்ண நவனீத சோரனே
கமல நயன கிருஷ்ண கம்ஸாதிகாலனே
கோகுலபாலா கிருஷ்ண கோபியர்லோலா
சாமளதேஹா கிருஷ்ண சத்ரு ஸம்ஹாரா
தீனரின்பாலா கிருஷ்ண தேவகி பாலனே
பண்டரீ வாழும் கிருஷ்ண பக்தவத்ஸலனே
ஆர்த்தி வாங்கும் கிருஷ்ண அமரரின் தேவனே
குறைதனைத் தீரும் கிருஷ்ண குவலய நாதனே

13. ஏகநாதர்

மறைபல உலகே பலவார் போற்றும் ஆதியொன்றே ராம்
[ரஹீம்
இகமீது மாந்தர்தானே ஆதியை ஜனார்த்தன
அரனே அல்லா என்றும் வேறாகவே போற்றுவார் (மறை)

20. ருக்மணி

ப்ருந்தாவன தேவிநீ புரிவாயே உனதாசி புனிதே சுப
[காரிணி (ப்ரு)

கோரி தருணியானே வர தேவி பாரிலே
நாதனைத்தானே வானேரும்றியா
மாயோகி ஏக்னே
தானே தாக்கோரினேனே (ப்ரு)

21. ருக்மணி

(விருத்தம்)

கண்டவர் கலங்கும் வண்ணம் கடுந்தவம் செய்யுமந்த
தொண்டருள் பைடனிவாழ் துல்யனும் ஏகநாதன்
கொண்டதோர் பக்தி தன்னைக் குவலயமறியச் செய்யத்
தொண்டுகள் புரிந்து வாரார் துய்யனும் எனைமறந்தே

22. கிருஷ்ணன்

ஜகமிதே மாயையின் மாயமதாலே
மஹாமேதைகளை மமதையினுலே
தீதற தவமதைக் தருவழிமூடி
தூமலமே வர நாடி நாடி
ஓடிடுமனமே போகவிடானே.
ஏகநாதனினியே தானே
மாறு திகி ஓதிடுவாகினே

23. (கோரஸ்)

மாதவனே போற்றினேமே
மாகருணை ஸாகரனே
இருளைப்போக்கி ஞானமீந்து
அருளினுலேயே ஆசி கூறி
தீதறகர்ம நீதி ஓதி
வேதரூப தேவனே நீ
ஸமரஸமே தானே தழைத்து ஓங்க

ராயல் பிரஸ் கோயமுத்தூர்.

கதை, வசனம், பாட்டுக்கள் எழுதியவர்

S. நாராயண அய்யர்

படம் பிடித்தவர்

J. S. படேல்

ஒலிப்பதிவு செய்தவர்

M. D. ராஜாராம்

பாட்டும், வாத்தியமும், டைரெக்ட் செய்தவர்

N. B. S. மணி & N. ராமமூர்த்தி

படம் டைரெக்ட் செய்தவர்

H. S. மேத்தா



எங்கள் பத்து பாட்டுகளையும் ஹிஸ் மா ஸ்டர்ஸ் வாய்ஸ் ரிகார்டுகளில் கேட்கவும்.

தீபாவளியன்று எங்கள் படத்தை அடியில் கண்ட இடங்களில் எதிர்பாருங்கள்:-

வெல்லிங்டன் டாக்கீஸ், திருச்சி.
சுந்தரம் டாக்கீஸ், மாயவரம்.
லக்ஷ்மி டாக்கீஸ், பேங்களூர்.
உதகமண்டலம், நீலகிரி.

ராயல் பிரஸ், கோயமுத்தூர்.